## 8.வரி செலுத்துவோர் இந்த முடிவை எதிர்த்தால் மேற்கொள்ள வேண்டியவை யாவை?

ஆதனத்தின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் விதிக்கப்படும் வரி ரூபா 1500/=க்கு குறைவாக இருந்தால் நீதவான் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்தல்

ஆதனத்தின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் விதிக்கப்படும் வரியானது ரூபா 1500ஃஸ்ரீக்கு மேல் இருந்தால் மாவட்ட நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்தல்

நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்ய வேண்டும்

• நீதிமன்றங்கள் வழங்கும் இறுதித் தீர்ப்பு அனைத்து தரப்பினரையும் கட்டுப்படுத்தும்

## 9.ஆதனவரியிலிருந்து விலக்கு பெறக்கூடிய சொத்துக்கள் எவை?

மத வணக்கஸ்தலங்கள், மத போதகர்கள் தங்கி வாழ்கின்ற கட்டிடங்கள் மற்றும் இடங்கள் அல்லது காணிகள் பொதுவான மத வழிபாட்டுச் செயற்பாடுகளுக்காக முழுவதுமாக அல்லது பிரதானமாக பயன்படுத்தப் படுகின்ற அனைத்து இடங்களும் கட்டிடங்களும் அரசினால் அனுமதியளிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட கலாச்சார, சமூக மற்றும் மத வழிபாட்டுச் செயற்பாடுகளுக்காக முழுவதுமாக அல்லது பிரதானமாக பயன்படுத்தப்படுகின்ற. உரிமையாளரின் வறுமை நிலைமையைக் காரணமாகக் கொண்டு சபையினால் முன்மொழியப்பட்டு இணக்கம் பெறப்பட்டதன் மூலம் அவ்வரியிலிருந்து விசேடமாக விலக்களிக்கப்பட்ட சொத்துக்கள் அவ்வாறான நிறுவனமொன்றினால் சொந்தமாக கொள்ளப்பட்ட அனைத்து கட்டிடங்களும் இடங்களும் அல்லது காணிகளும் கட்டணம் அறவிடாத கல்வி நிறுவனம், அரச ஆதரவுடன் கட்டணம் செலுத்தப்படுகின்ற அல்லது முதலில் அவ்வாறு ஆதரவளிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தினால் முழுதும் அல்லது பிரதானமாக பயன்படுத்தப்படுகின்ற காணிகள் அல்லது இடங்கள் மற்றும் கட்டிடங்கள் இடுகாடுகள் சுடுகாடுகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அல்லது பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து மயானங்களும் அடக்கத்தலங்களும்

## 10. ஆதனவரியினை ஏதாவது சந்தர்ப்பங்களில் குறைப்பதற்கு ள்ளுராட்சிமன்றங்களிற்கு வாய்ப்புள்ளதா?

தளபாடங்களுடன் வாடகைக்குக் கொடுப்பதற்காக உள்ளூராட்சி மன்றம் ஒன்றுடன் பதிவு செய்துகொண்டுள்ள கட்டிடமொன்றிற்காக உரிய ஆதனவரியின் ஒரு அரைப்பகுதி குடியிருக்காத அக்காலப்பகுதிக்காக குறைக்கப்பட முடியும். யாதேனும் கட்டிடமொன்று குடியிருக்கவில்லை என எழுத்து மூலம் உள்ளூராட்சி மன்றத்திற்கு அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து மீண்டும் வசிப்பதற்கு வருவதாக அதுபற்றி மாகாண சபைக்கு அறிவிக்கப்பட்ட தினம் வரை உள்ளூராட்சி மன்றத்திற்கு ஆதன மதிப்பீட்டு வரியிலிருந்து விலக்களிக்கப்பட முடியும். யாதேனும் ஒரு கட்டிடம் குடியிருக்கவில்லை என அறிவிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில். அக்கட்டிடம் மீண்டும் குடியிருப்பிற்கு பயன்படுத்தப்பட்ட தினத்திலிருந்து 3 நாட்களுக்குள் அதுபற்றி உள்ளூராட்சி மன்றத்திற்கு அறிவிக்கப்படாவிடின். அதன் கால எல்லை. கட்டிடம் மீண்டும் குடியிருப்பு மேற்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாதத்திற்கு முந்திய தினமொன்றிலிருந்து வரி அறவீடு செய்யப்படும்




# ஆதனவரி அறவீடு

## 1. ஆதன வரி ஏன் உள்ளுராட்சி மன்றங்களினால் அறவிடப்படுகின்றது?

உள்ளுராட்சி அதிகார வரம்பிற்குள் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள வீடுகள், கட்டிடங்கள், நிலம், குடியிருப்புகள் மற்றும் குத்தகைக்கு விடப்பட்ட அரச சொத்துக்கள் உட்பட அனைத்து அசையாச் சொத்துக்களும் ஆதன வரிக்கு உட்பட்டவை. ஆதனத்தின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் அமைச்சர் (உள்ளுராட்சி விடயத்திற்குப பொறுப்பான அமைச்சர்: தற்போது மாகாண சபை அமைச்சர்) நிர்ணயிக்கும் சதவீதத்தின் அடிப்படையில் வரி கணக்கிடப்படுகிறது. குறித்த வரி வருமானத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட சேவையினை உள்ளுராட்சி மன்றங்களினால் வழங்குவதற்கு இயலுகின்றது.

## 2. எவ்வகையான ஆதனங்களிற்கு ஆதனவரி அறவீடு செய்யப்படுகின்றது?

- வரி செலுத்துவோரின் சொத்து உள்ளுராட்சி மன்றத்திற்குள் அமைந்திருத்தல்
- பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு நிலம் அல்லது கட்டிடத்தில் வசிப்பவராக இருத்தல்
- உள்ளுராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட அசையாச் ஆதனத்தின் உரிமையாளர்
- உள்ளுராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைந்துள்ள வீடு, கட்டிடம் அல்லது நிலத்தின் குத்தகைதாரர்
- உள்ளுராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட வீட்டின் வாடகைதாரர், உரிமையாளர் பெயரில் வரி செலுத்தலாம். வாடகைதாரர் செலுத்திய தொகையை வாடகையில் இருந்து குறைக்கலாம்.
- உள்ளுராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட அரசுசுக்கு சொந்தமான வீடு, கட்டடம் அல்லது நிலத்தின் குத்தகைதாரர், உள்ளுராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட அசையா ஆதனத்தின் கூட்டு உரிமையாளர்.

## 3. ஆதனவரி செலுத்தும் நீங்கள் வரிக் கழிவுக்கு தகுதியுடையவரா?

நடப்பு ஆண்டின் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் வரி செலுத்துவோர் ஆண்டிற்குரிய முழுவரியையும் செலுத்தினால் 10% கழிவு வழங்கப்படும்.
அந்த காலாண்டின் தொடக்கத்தில் வரி செலுத்துவோர் ஒவ்வொரு காலாண்டிற்கான தொகையை செலுத்தினால் 5% கழிவு வழங்கப்படும்.

## 4. ஆதன வரி விகிதங்களை எவ்வாறு உள்ளுராட்சி மன்றம் நிர்ணயிக்கின்றது?

| | |
|---|---|
| படி ஒன்று | உள்ளுராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட சொத்துக்களின் வருடாந்த மதிப்பைக் கணக்கிடுதல் |
| படி இரண்டு | உள்ளுராட்சி மன்றத்தின் அனைத்து திட்டங்களினதும் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினங்களைக் கணக்கிடுதல் |
| படி மூன்று | மொத்த மதிப்பிடப்பட்ட மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவில் இருந்து பின்வருவனவற்றைக் கழிக்கவும் ஊழியர்களின் சம்பளம், சிறப்பு கட்டண நிதி பெறப்பட்ட நன்கொடைகள், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சேவைகளுக்கான கட்டணங்களில் திட்டமிடப்பட்ட மீண்டுவரும் செலவுகள், இறுதியாக உள்ளுராட்சி மன்றத்து மதிப்பீட்டு வரிவீதிப்பிலிருந்து சேகரிக்க வேண்டிய தொகையை கணக்கிடப்படும் |

எனவே, ஆதன வரி விகிதங்களை பின்வரும் அடிப்படையில் கணக்கிடலாம்

வருடாந்த ஆதன வரி = (ஆதன வரி மூலம் வசூலிக்கப்படும் தொகை X100) / (உள்ளுராட்சி மன்றத்தின் கீழ் உள்ள ஆதனங்களின் மொத்த ஆண்டு பெறுமதி)

## 5. ஆதன வரி செலுத்துவதற்கு நீங்கள் ஆட்சேபனை தெரிவிக்கும் பட்சத்தில் நீங்கள் என்ன படிகளைப் பின்பற்ற வேண்டும்?

- நோட்டீஸ் கிடைத்த 30 நாட்களுக்குள் எழுத்தில் ஆட்சேபனை பதிவு செய்யப்பட்ட தபாலில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
- உள்ளுராட்சி மன்றம் கிடைக்கும் ஆட்சேபனைகளை பதிவு செய்து பதிவேட்டினை பேணிவரும்
- ஆட்சேபனையைப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் விசாரணைக்கு வருமாறு முறைப்பாட்டாளரை உள்ளுராட்சி மன்றம் அழைக்கும்
- மூன்று மாதங்களுக்குள் விசாரணை நடத்தப்பட வேண்டும்
- விசாரணை முடிவை இரண்டு வாரங்களில் நபருக்கு அனுப்ப வேண்டும்

## 6. பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஆதனவரியை உள்ளுராட்சி மன்றம் எவ்வாறு செலவு செய்கின்றது?

- குறித்த வருமானது குறித்த உள்ளுராட்சி மன்றத்தின் எல்லைக்கள் நடைபெறுகின்ற கட்டுமான தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது உதாரணமாக வீதி, வடிகான்களை புதிதாக அமைப்பதற்கும்
- குறித்த வீதிகள் மற்றும் வடிகான்கள் பராமரிப்புச்செலவிற்கும்

## 7. பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஆதனவரியை உள்ளுராட்சி மன்றம் எவ்வாறு செலவு செய்கின்றது?

- ஆதனத்தின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் விதிக்கப்படும் வரி ரூபா 1500/=க்கு குறைவாக இருந்தால் நீதவான் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்தல்.
- ஆதனத்தின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் விதிக்கப்படும் வரியானது ரூபா 1500/= க்கு மேல் இருந்தால் மாவட்ட நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்தல்.
- நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்ய வேண்டும் நீதிமன்றங்கள் வழங்கும் இறுதித் தீர்ப்பு அனைத்து தரப்பினரையும் கட்டுப்படுத்தும்.

"உங்கள் ஆதனவரியினை உரிய காலத்தில் செலுத்துவதன் மூலம் உள்ளூர் அபிவிருத்திக்கு உங்கள் பங்களிப்பினை உறுதிப்படுத்துங்கள்"